1981 ஆகஸ்டு 31)

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம் திருத்தணி வட்டம், மேல்பாலாபுரம் கிராமத்தில் ஒரு குளம் அமைக்கும் திட்டத்திற்கான செயற் குறிப்பு தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

முகவை மாவட்டம், கம்பிக்குடி கட்டிக்குளம் கண்மாய்களை மேம்பாடு செய்யும் திட்டம்.

*வினா எண்.117— திரு. எம். பிச்சை: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) முகவை மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதியில் கம்பிக்குடி கண்மாயையும், மானாமதுரை தொகுதியில் கட்டிக் குளம் கண்மாயையும் உலக வங்கியின் கடன் வழங்கு திட்டத் தின் மூலம் மேம்பாடு செய்யும் செயற்குறிப்பு அரசு பரிசீலனை யில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்மிகுபு திரு. கே. இராஜா முகமது:— (அ) ஆம்.

"(ஆ) கண்மாய்களை நவீனப்படுத்தும் திட்டத்தின்" கீழ் இக்கண்மாய்கள் முன்னோடி திட்டங்களாக எடுத்துக்கொள்ளப பட்டு கால்வாய்களில் சிமெண்ட் பலகைப்பதிக்காமல் ஏற்படும் நீர் கசிவு அளவு பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. இப் பரிசோதனைகள் முடிவுற்றபின், திட்டங்கள் எடுத்துக்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. க பாரமலை: இத்திட்டங்கள் பொறுத்து முன்னோடித் திட்டங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டு பரிசோதனைகள் செய்யப் படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இவை மிகவும் பாதிக்கப்பட்ட கண்மாய்கள் ஆகவே இந்த வேலைகள் விரைவில் துவக்கப்படவேண்டும். அப்போதுதான் வருகிற மழைக் காலத்தில் தண்ணீரை தேக்கி வைகக முடியும். சென்ற தடவை அந்தக் கண்மாய்ப்பாசனம் முழுமையிலும் பயிர்கள் விளைய வில்லை. ஆகவே அதை கருத்தில் கொண்டு இந்த வேலைகளைத் தீவிரமாகச் செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: இந்தத் திட்டம் உலக வங்கியன் நிதியுதவி பெற்று 600 ஏக்கருக்கும் அதற்கு மேலாக உள்ள ஏககர்களுக்கு பாசன வசதி தரககூடிய வகையில 490 கண்மாய்களை சுமார் 120 கோடி ரூபாய் செலவில் தூர் எடுத்து கண்மாய்களின் கொள்ளளவை அதிகப்படுத்தி நவீன முறையில் பாசனவசதி செய்து தருவதற்காக எடுத்துக் கொள்ளப் படயிருக்கிற ஒரு திட்டத்தின் முன்னோடி திட்டமாகும். ஆகவே அவர்களால் வரையறுக்கப்படுகிற நிலையில்தான் இந்தத் திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டம்

நிறைவேற்றப்படும்போது அந்த திட்டம் அந்தப்பகுதி மக்களுக்கு எவ்வளவு பெரியதொரு வரப்பிரசாதம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணருவார்கள். ஆரம்ப வேலைகளை விரைவில் முடிக்க அரசு உத்தரவிடும்.

திரு. எம். பிச்சை: அருப்புக்கோட்டைத் தொகுதியில் உள்ள கம்பிக்குடி கண்மாயை 'கண்மாய்களை' நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் கொண்டு வருவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளதற்கு அருப்புக்கோட்டை தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்? மதுரை மாவட்டம் நிலையூர் கூத்தியார்குண்டு கண்மாய் வழியாக, வைகையில் நீர் நிரம்பி வழியும் போது மறுகால் மூலம் கூத்தியார்குண்டு கண்மாய் நிறைந்து வரும் தண்ணீரை கம்பிக்குடி கண்மாய்க்கு, உலகாணி கால்வாயை ஆழப்படுத்தி கம்பிககுடி கண்மாய்க்கு தண்ணீர் கொடுக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: இந்த முன்னோடித் திட்டத்தை விரைவில் முடித்துக்கொண்டு கூடுமான வரையில் உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல உபரித் தண்ணீரைத் கம்பிக்குடி கண்மாய்க்கு வரும் வகையில்தான் குறிப்புகள் இருக்கின்றன. முன்னோடித் திட்டத்தின் அறிக்கை வந்த பிறகுதான் அதுகுறித்த விரிவான தகவல்களைத் தர முடியும்.

திரு செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் மூலமாக 5 0 ஏக்கர், அதற்கு மேற்பட்ட நீர்ப்பாசன கண்மாய்களை எடுத்துக்கொண்டு வேலைசெய்வதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இன்றைக்கு 2,000, 3,000 7,000 ஏக்கர்கள் நீர்ப்பாசன வசதி பெறும் கண்மாய்கள் எல்லாம் விடப்பட்டிருக்கின்றன. எப்படி இந்தக் கண்மாய்களை செலக்ஷன் செய்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்திலே 8 இடங்களிலே இந்தக் கண்மாய்களை முன்னோடித் திட்டத்தின்கீழ் நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்தக் கண்மாய்களின் வேலையை முன்னோடித் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்டு, அதிலே ஏற்படக்கூடிய அனுபவத்தைப் பெற்று, மேற்கொண்டு இந்தத் திட்டத்தைத் தயாரிக்க எவ்வளவுதூரம் இந்த முன்னோடித் திட்டம் உதவுகிறது என்பதைப் பார்த்து, அதன்பின் பிற கண்மாய்களை எடுத்துக் கொள்வது என்பது அரசின் நிலை.

பாசன மேம்பாட்டுத் திட்டங்கள்—

குறிப்பிட்ட கால வினா எண். 2—. திரு பி. ஈவரஸ்மூர்த்தி என்கிற சொர்ணம் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—